**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி**

**முன்னிலை: – திருமதி T.கண்மணி, பி.ஏ., எல்.எல்.பி.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவிநாசி**

**2025 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 01 ஆம், நாள் வெள்ளிகிழமை**

**இடை.மனு.எண்.128/2023**
**இன்**
**அசல் வழக்கு எண்.07/2023**
**CNR No.TNTI12-000008-2023**

1.K.ஜெயலட்சுமி
2.P.சியாமலா

...மனுதாரர்கள்/வாதிகள்

**.. எதிர் ..**

1.விஜயலட்சுமி (எ) வனிதா

2.ராஜேஸ்வரி

3.சுமதி

...எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக 21.07.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ராஜ்குமார் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.நிர்மலா அவர்கள் ஆஜராகியும், 2ம் மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் இருந்து தள்ளுபடி செய்யப்பட்டடு உத்தரவிடப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## உத்தரவு

அசல் வழக்கு முடியும் வரை மனு சொத்தில் எதிர்மனுதாரரோ, அவரது ஆட்களோ, அல்லது அவரது முகவர்களோ, எதிர்மனுதாரர்கள் கீழ் உரிமை கோரும் எந்த ஒரு நபர்களோ, மனுதாரர்களின் அமைதியான சுவாதீனத்திற்கு எவ்வித தொல்லை கொடுக்கவோ, இடையூறு செய்யவோகூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இடைநிலை மனு முடியும் வரை உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 39 விதி 1, 2–ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :–**

2.1.) அசல் வழக்கில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மனுதாரர்கள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றும், சொக்கனூர் கிராமத்தில் உட்பட்ட சர்வே எண்.225/3 உள்ளடக்கிய 1176 சதுரடி அளவுள்ள வீட்டு மனையாக உள்ள தாவா சொத்துக்கள் ஒப்படைவு பட்டா 757/1407 மூலம் மனுதாரருக்கு சொந்தமானது என்றும், தமிழ்நாடு அரசு 1998 ஆம் ஆண்டு மனுதாரருக்கு ஆதரவாக மேற்படி பட்டாவை வழங்கப்பட்டுள்ளது என்றும், ஆதியில் தாவா சொத்தானது நத்தம் நிலமாக இருந்ததாகவும், பின்னிட்டு தமிழ் நாடு அரசால் வீடு மற்றும் நிலம் இல்லாதவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், அரம்ப காலத்தில், தாவா சொத்தினை சுமார் 50 வருடங்களாக மனுதாரரின் கணவர்

கன்னியப்பனால் ஆண்டு அனுபவத்தில் இருந்தாகவும், மேற்படி கன்னியப்பன் தாவா சொத்தில் ஓலை குடிசை அமைத்து அவரது குடும்பத்தினருடன் வாழ்ந்து வருவதாகவும், மேற்படி ஓலை குடிசையானது பாழடைந்துவிட்டது என்றும், அரசாங்கத்தில் பட்டா வழங்கக்கோரி மனு செய்துள்ளோம் என்றும், இதற்கிடையில் கன்னியப்பன் கடந்த 2010 ஆண்டு காலமாகிவிட்டார் என்றும், மேற்படி ஒப்படைவு பட்டாவை பொறுத்து மனுதாரர்கள் தான் தாவா சொத்தினை காலம் சென்ற கன்னியப்பனுக்கு பின்னிட்டு அவரது வாரிசுகளாக இருந்து ஆண்டு அனுபவம் செய்து வருகிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

2.2) எதிர்மனுதாரர்களுக்குத் தாவா சொத்திற்கும் எவ்வித சம்மந்தம் இல்லை என்றும், எதிர்மனுதாரர்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், தாவா சொத்தில் ஒரு சிறு வீடு கட்டிய பின்னிட்டு காலியாக இருப்பதை அறிந்த எதிர்மனுதாரர்கள் நீண்ட வருடங்களாக எல்லா விதமான தொந்தரவு கொடுத்து மனுதாரர்களின் அமைதியான அனுபவத்திற்க இடையூறு செய்வதாகவும், கடந்த 30.06.2016 தேதியில் எதிர்மனுதாரர்கள் திடிரென தாவா சொத்திற்குள் நுழைந்து மனுதாரர்களை தாவா சொத்தில் நுழையாத வகையில் கம்பி வேலிகளை சட்டத்திற்கு புறம்பாக அமைத்துள்ளார்கள் என்றும், பின்னிட்டு எதிர்மனுதாரர்களால் சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிக்கப்பட்ட தாவா சொத்தினை குறித்து மனுதாரர்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் தாசில்தார் ஆகியோர்களிடம்

நிவாரணம் வேண்டி மனு கொடுக்கப்பட்டது என்றும், அதனை பொறுத்து மாவட்ட ஆட்சியர், தாசில்தார் மற்றும் வருவாய் துறை அலுவலர் ஆகியோர்கள் மூலம் தாவா சொத்தினை பார்வையிட்டு, விசாரினை செய்யப்பட்டு சட்டத்திற்கு புறம்பாக அமைக்கப்பட்ட கம்பி வேலிகளை நீக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று தெரித்துள்ளார்கள். 1ம் எதிர்மனுதாரர் வருவாய் துறையில் பணிபுரிந்து ஒய்வு பெற்றவர் என்பதால் வருவாய் துறையில் அவருக்கு உள்ள செல்வாக்கை பயன்படுத்தி பட்டாவை பெயர் மாற்றம் செய்திடவும், தாவா சொத்தினை அபகரிக்கவும் முயற்சி செய்து வருகிறார்கள் என்றும், தாவா சொத்திற்கு செல்ல மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட வழிதடத்தினை எதிர்மனுதாரர்களால் தடுக்க முயற்சி செய்வதாகவும், மேற்படி வழிதடம் மட்டுமே தாவா சொத்திற்கு செல்ல ஒரே வழிப்பாதை என்றும், அதை எதிர்மனுதாரர்களால் தடுக்கப்பட்டால் வீட்டிற்கு செல்ல பாதை இல்லை என்றும், இதனால் மனுதாரர்களின் தாவா சொத்தில் உள்ள உரிமை மறுக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். பின்னிட்டு, எதிர்மனுதாரர்கள் மீண்டும் தாவா சொத்தில் மனுதாரர்களின் அமைதியான அனுபவத்தை தொந்தரவு செய்ய முயற்சி செய்கிறார்கள் என்பதால் மனுதாரர்களால் தாவா சொத்தில் எதிர்மனுதாரர்கள் நுழையாத வகையில் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதே மனுதாரர்கள் தாக்கல் செய்த இம்மனுவின் சுருக்கமாகவும்.

3) **<u>1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை இந்த மனுவின் எதிருரையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>**:–

3.1) மனு பொய் என்றும், சட்டப்படி நிலைக்கதக்கது அல்ல என்றும், எதிர்மனுதாரர் ஏற்றுக்கொண்ட சங்கதிகளை தவிர பிற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும் என்றும், மனுதாரர்களின் சொத்துக்களுக்கு எதிர்மனுதாரர்கள் பட்டா பெற முயற்சிக்கிறார்கள் என்பது முற்றிலும் பொய் என்றும், எதிர்மனுதாரரின் கணவருக்கு ஆவணங்களின் படியும், தனித்து உரிமை பட்டாவின் படியும் க.ச.எண்.331/15 தற்போது க.ச.எண்.331/44 மற்றும் 331/45 காலைகளில் 2 மற்றும் 3 எதிர்மனுதாரர் பெயரில் பட்டா தாக்கலாகி அதில் குடியிருப்பு வீடு உள்ளது என்றும், மேற்படி சொத்தை 1 ம் எதிர்மனுதாரர் அவரது தனிப்பட்ட சொத்துக்களாக அனுபவித்து வருகிறார் என்றும், மேற்படி சொத்தில் தென்புற எல்லையை தொந்தரவு செய்திட வேண்டும் என்ற எண்ணத்தில் மனுதாரர்கள் பொய்யான தாவாவை தாக்கல் செய்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

3.2) க.ச.எண்.331/15 ல் உள்ள காலியிடம் மற்றும் தென்வடல் மற்றும் கிழமேல் சந்துக்களில் மனுதாரர்களுக்கு எவ்விதமான உரிமையும் இல்லை என்றும், க.ச.எண்.331/17 காலையில் உள்ள எதிர்மனுதாரின் சொத்துக்களை பொறுத்து இடையூறு செய்திட வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த தாவாவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், வருவாய்துறை ஆவணங்களின் படி

க.ச.எண்.331/18 என்பது கிழமேல் தடமாகும் என்றும். மேற்படி பாதையை இந்த எதிர்மனுதாரர்கள் மற்றும் மனுதாரர்கள் அனுபவம் செய்து தடமாக அனுபவித்து வருகிறார்கள் என்றும், மேற்கண்ட உண்மை சங்கதியான கிழமேல் தடத்தை மனுதாரர்கள் அவர்களது வழக்குரையில் வேண்டுமென்றே மறைத்துள்ளர்கள் என்றும், சொக்கனூர் கிராமம் க.ச.எண்.331/17 காலையில் உள்ள இந்த எதிர்மனுதாரரின் கணவர் பழனிச்சாமிக்கு உள்ள பழைமையான வீட்டில் தென்புற மற்றும் வடபுற அத்துக்களில் இடையூறு செய்திட வேண்டும் என்ற எண்ணத்தில் முழுமையான சொத்து விபரம் எதுவும் குறிப்பிடாமல் உரிமை மூல ஆவணங்கள் மற்றும் வருவாய்துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாமல் இந்த மனுவானது நிலைக்கதக்கதல்ல என்றும், மனுதாரர்களின் சொத்துக்களுக்கு எந்த பாதையின் வழியாக சென்றடைகிறார்கள் என்ற விபரத்தை வழக்குரையில் குறிப்பிடவில்லை என தெரிவித்துள்ளார்கள்.

3.3) மனுதாரர்கள் வழக்குரையில் குறிப்பிட்ட கதவு எண் தவறு என்றும். அது 1ம் பிரதிவாதியின் கணவர் பழனிச்சாமி பெயரில் உள்ள கதவு எண் ஆகும் என்றும். அவர்கள் இந்து மத வழக்கத்தினை பின்பற்றுவதில்லை என்றும். பெரியகருப்பனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் ஒரு பகுதியினை கன்னியப்பன் வகையறா மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றும், அதனை வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றும், க.ச.எண்.331/14 நத்தம் இடத்தினை

கன்னியப்பன் வகையறா பயன்படுத்தி வருவதையும் மனுதாரர்கள் அவர்களது வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றும், செக்குபந்தி முற்றிலும் தவறு என்றும், 1176 சதுரடி இடத்தினை வாதிகள் அனுபவம் செய்து வருவதற்கான ஆவணங்கள் எதுவும் மனுதாரர்கள் தாக்கல் செய்யவில்லை என்றும், தாவா சொத்துக்களை மனுதாரர்கள் 1998 ம் ஆண்டு முதல் அனுபவம் செய்து வருவதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யபடவில்லை என்றும், எதிர்மனுதாரர், மனுதாரர்களின் சொத்துக்களுக்குண்டான உரிமையை மறுப்பதால் விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றும், க.ச.எண்.331/18 தடம் பற்றி உண்மை சங்கதிகளை மறைத்து தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்பதே எதிர்மனுதாரர்கள்தாக்கல்செய்துள்ள இந்த எதிருரையின் சுருக்கமாகும்..

4) எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதம் கேட்கப்பட்டுள்ளது. இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1, 2 மற்றும் 3 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் ஆவணம் குறியீடு செய்யப்பட வில்லை. வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**5) <u>இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா? என்பதே தீர்மாணிக்கப்பட வேண்டிய விஷியமாகும்:-</u>**

5.1.) இம்மனுவின் தரப்பினர்களை அசல் வழக்கின் வரிசைக்கு இணங்க

மனுதாரர்களை வாதிகள் என்றும், எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகள் என்றும் குறித்து உரைக்கப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கானது வாதிகள், பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தொடர்ந்துள்ளார்.

5.2.) இம்மனுவினை முடிவு செய்வதற்கு முன்பாக கட்டளை 39 விதி 1–ஐ இவ்விடத்தில் குறித்துரைக்கப்படவேண்டியது அவசியமாகிறது.

கட்டளை 39 விதி 1, 2

1. Cases in which temporary injunction may be granted

Where in any suit it is proved by affidavit or otherwise-

(a) that any property in dispute in a suit is in danger of being wasted, damaged or alienated by any party to the suit, or wrongfully sold in execution of a decree, or

(b) that the defendant threatens, or intends, to remove or dispose of his property with a view to defrauding his creditors,

(c) that the defendant threatens to dispossess, the plaintiff or otherwise cause injury to the plaintiff in relation to any property in dispute in the suit,

the Court may be Order grant a temporary injunction to restrain such act, or make such other Order for the purpose of staying and preventing the wasting, damaging, alienation, sale, removal or disposition of the property or dispossession of the plaintiff, or otherwise causing injury to the plaintiff in relation to any property in dispute in the suit] as the Court thinks fit, until the disposal of the suit or until further Orders.

2. Injunction to restrain repetition or continuance of breach;

(1) In any suit for restraining the defendant from committing a breach of contract or other

injury of any kind, whether compensation is claimed in the suit or not, the plaintiff may, at any time after the commencement of the suit, and either before or after judgment, apply to the Court for a temporary injunction to restrain the defendant from committing the breach of contract or injury complained, of, or any breach of contract or injury of a like kind arising out of the same contract or relating to the same property or right.

(2) The Court may be Order grant such injunction, on such terms as to the duration of the injunction, keeping an account, giving security, or otherwise, as the Court thinks fit.

5.3.) **மாண்புமிகு உச்ச நீதிமன்றம்** Dalpat Kumar v. Prahlad Singh (1992) 1 SCC 719 , a Bench of two Judges of Hon'ble Apex Court held that the phrases "prima facie case", "balance of convenience" and "irreparable loss" are not rhetoric phrases for incantation but words of width and elasticity, intended to meet myriad situations presented by men's ingenuity in given facts and circumstances and should always be hedged with sound exercise of judicial discretion to meet the ends of justice. The court would be circumspect before granting the injunction and look to the conduct of the party, the probable injury to either party and whether the plaintiff could be adequately compensated if injunction is refused. The existence of prima fade right and infraction of the enjoyment of him property or the right is a condition for the grant of temporary injunction. Prima facie case is not to be confused with prima facie title which has to be established on evidence at the trial. Only prima facie case is a substantial question raised, bona fide, which needs investigation and a decision on merits. Satisfaction that there is a prima facie case by itself is not sufficient to grant injunction. The court further has to satisfy that non-interference by the court would result in "irreparable injury" to the party seeking relief and that there is no other remedy available to the party except one to grant

injunction and he needs protection from the consequences of apprehended injury or dispossession. Irreparable injury, however, does not mean that there must be no physical possibility of repairing the injury but means only that the Injury must be a material one, namely one that cannot be adequately compensated by way of damages. The balance of convenience must be in favour of granting injunction. The court while granting or refusing to grant injunction should exercise sound judicial discretion to find the amount of substantial mischief or injury which is likely to be caused to the parties if the injunction is refused and compare it with that which is likely to be caused to the other side if the injunction is granted. If on weighing competing possibilities or probabilities of likelihood of injury and if the court considers that pending the suit, the subject matter should be maintained in status quo, an injunction would be issued. The court has to exercise its sound judicial discretion in granting or refusing the relief of ad interim injunction pending the suit." **– என்று மேற்படி வழங்கியுள்ள கருத்து செறிவுமிக்க முன்தீர்ப்பினையை அடிப்படையாக கொண்டு மாண்புமிகு உச்சநீதிமன்றம் Maria Margarida sequeria Fernandes Vs Frasmo Jack De sequeria (2012)5 SCC 370 என்ற வழக்கிலும் வழங்கியுள்ளகருத்து செறிவுமிக்க முன்தீர்ப்பினை இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டுள்ளது.**

5.4.) மேற்கண்ட சட்டவகைமுறையையும், மாண்புமிகு உச்ச நீதிமன்ற முன்தீர்ப்புகளின் அடிப்படையிலும் **1. முதல் தோற்ற வழக்கு 2. வாய்ப்புகளின் சமநிலைமை 3. ஈடு செய்யமுடியாத இழப்பு** ஆகியவை மனுதாரர்களுக்கு ஆதராக இருந்தால் இடைகால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கலாம் என்பதை

இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டுள்ளது. இந்நிலையில் சொக்கனூர் கிராமத்தில் உட்பட்ட சர்வே எண்.225/3 உள்ளடக்கிய 1176 சதுரடி அளவுள்ள வீட்டு மனையாக உள்ள தாவா சொத்துக்கள் ஒப்படைவு பட்டா 757/1407 மூலம் மனுதாரருக்கு சொந்தமானது என்றும், தமிழ்நாடு அரசு 1998 ஆம் ஆண்டு மனுதாரருக்கு ஆதரவாக மேற்படி பட்டாவை வழங்கப்பட்டுள்ளது என்றும், ஆதியில் தாவா சொத்தானது நத்தம் நிலமாக இருந்ததாகவும், பின்னிட்டு தமிழ் நாடு அரசால் வீடு மற்றும் நிலம் இல்லாதவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், அரம்ப காலத்தில், தாவா சொத்தினை சுமார் 50 வருடங்களாக மனுதாரரின் கணவர் கன்னியப்பனால் ஆண்டு அனுபவத்தில் இருந்தாகவும், மேற்படி கன்னியப்பன் தாவா சொத்தில் ஒலை குடிசை அமைத்து அவரது குடும்பத்தினருடன் வாழ்ந்து வருவதாகவும், மேற்படி ஒலை குடிசையானது பாழடைந்துவிட்டது என்றும், அரசாங்கத்தில் பட்டா வழங்கக்கோரி மனு செய்துள்ளோம் என்றும், இதற்கிடையில் கன்னியப்பன் கடந்த 2010 ஆண்டு காலமாகிவிட்டார் என்றும், மேற்படி ஒப்படைவு பட்டாவை பொறுத்து மனுதாரர்கள் தான் தாவா சொத்தினை காலம் சென்ற கன்னியப்பனுக்கு பின்னிட்டு அவரது வாரிசுகளாக இருந்து ஆண்டு அனுபவம் செய்து வருகிறோம் என்றும், தாவா சொத்துக்கு சம்பந்தமில்லாத எதிர்மனுதாரர்கள் தாவாசொத்தை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர்கள் அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை தடைசெய்ய முயற்சி செய்து

வந்ததால் மனுதாரர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக அசல் வழக்கையும் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக இம்மனுவையும் தாக்கல்செய்துள்ளார். இந்நிலையில் மனுதாரரின் மனுவை ஆட்சேபிக்கும் வகையில் எதிர்மனுதாரரின் கணவருக்கு ஆவணங்களின் படியும், தனித்து உரிமை பட்டாவின் படியும் க.ச.எண்.331/15 தற்போது க.ச.எண்.331/44 மற்றும் 331/45 காலைகளில் 2 மற்றும் 3 எதிர்மனுதாரர் பெயரில் பட்டா தாக்கலாகி அதில் குடியிருப்பு வீடு உள்ளது என்றும், மேற்படி சொத்தை 1 ம் எதிர்மனுதாரர் அவரது தனிப்பட்ட சொத்துக்களாக அனுபவித்து வருகிறார் என்றும், மேற்படி சொத்தில் தென்புற எல்லையை தொந்தரவு செய்திட வேண்டும் என்ற எண்ணத்தில் மனுதாரர்கள் பொய்யான தாவாவை தாக்கல் செய்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

5.5) க.ச.எண்.331/15 ல் உள்ள காலியிடம் மற்றும் தென்வடல் மற்றும் கிழமேல் சந்துக்களில் மனுதாரர்களுக்கு எவ்விதமான உரிமையும் இல்லை என்றும், க.ச.எண்.331/17 காலையில் உள்ள எதிர்மனுதாரின் சொத்துக்களை பொறுத்து இடையூறு செய்திட வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த தாவாவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், வருவாய்துறை ஆவணங்களின் படி க.ச.எண்.331/18 என்பது கிழமேல் தடமாகும் என்றும். மேற்படி பாதையை இந்த எதிர்மனுதாரர்கள் மற்றும் மனுதாரர்கள் அனுபவம் செய்து தடமாக அனுபவித்து

வருகிறார்கள் என்றும், மேற்கண்ட உண்மை சங்கதியான கிழமேல் தடத்தை மனுதாரர்கள் அவர்களது வழக்குரையில் வேண்டுமென்றே மறைத்துள்ளர்கள் என்றும், சொக்கனூர் கிராமம் க.ச.எண்.331/17 காலையில் உள்ள இந்த எதிர்மனுதாரரின் கணவர் பழனிச்சாமிக்கு உள்ள பழைமையான வீட்டில் தென்புற மற்றும் வடபுற அத்துக்களில் இடையூறு செய்திட வேண்டும் என்ற எண்ணத்தில் முழுமையான சொத்து விபரம் எதுவும் குறிப்பிடாமல் உரிமை மூல ஆவணங்கள் மற்றும் வருவாய்துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாமல் இந்த மனுவானது நிலைக்கதக்கதல்ல என்றும், மனுதாரர்களின் சொத்துக்களுக்கு எந்த பாதையின் வழியாக சென்றடைகிறார்கள் என்ற விபரத்தை வழக்குரையில் குறிப்பிடவில்லை என ஆட்சேபணை செய்துள்ளனர்.

5.6) அவ்வாறிருக்க எதிர்மனுதாரர்கள் மனு சொத்துக்குள் அத்துமீறி நுழைந்து மனுதாரர் மனு சொத்தினை அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை தடை செய்ய முயற்சி செய்வதாக கூறுவதற்கு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. இதுகுறித்து காவல்நிலைத்தில் புகார் எதுவும் கொடுத்தாக வாதுரைக்கவும் இல்லை. எதிர்மனுதாரர்கள் அத்துமீறி தடை செய்ய முயற்சி செய்வதை மனுதாரர் தனது நலன்விரும்பிகளுடன் சேர்ந்து தடுத்துவிட்டதாக மட்டுமே கூறப்படுகிறது. எந்த வகையில் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தில் அத்துமீறுகிறார்கள் என்பதையோ, எந்த வகையில் மனு சொத்தினை மனுதாரர்கள்

அமைதியாக அனுபவம் செய்து வந்ததை, ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்கிறார்கள் என்பதையோ குறிப்பிட்டு கூறவில்லை. எனவே இம்மனுவில் மனுதாரர்களுக்கு முதல் தோற்ற வழக்கு மனுதாரர்களுக்கு இல்லை.

5.7) மனு சொத்தில் எதிர்மனுதாரர்களுக்கும் ஆவணங்களின் படி உரிமை உள்ளதாக எதிர்மனுதாரர்கள் தங்களது எதிருரையில் கூறியுள்ள நிலையில், தாவா சொத்துக்களில் உரிமையை பொறுத்தே தரப்பினர்களுக்கு இடையே பிரச்சனை இருப்பதாக அறிய முடிகிறது. இந்நிலையில் தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனைகளை அசல் வழக்கில் விசாரணை செய்தால் தான் தீர்வு காண இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்கண்ட சூழ்நிலையில், மனுதாரர்களுக்கு ஆதரவாக வாய்ப்புகளின் சமநிலையில் இடு செய்ய இயலாத நஷ்டமும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்த இம்மனுவை நீதியின் நலன் கருதி அனுமதிக்க உகந்தது அல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு செலவு தொகையின்றி தள்ளுபடி செய்து உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 01.08.2025 அன்று அவையறிய

பகரப்பட்டது.

KANMANI T Digitally signed by KANMANI T Date: 2025.08.01 17:08:24 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி**

**<u>பிற்சேர்க்கை :</u> –**
**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 04.02.1959 | வெங்கடசால கவுண்டர் பெயரில் உள்ள கிரைய ஆவணம் – சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 27.04.1959 | கொளந்தான் பெயரில் உள்ள கிரைய ஆவணம் – சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.3 | | சொக்கனூர் கிராமம் க.ச.எண்.331 புல வரைபடம் |

KANMANI T Digitally signed by KANMANI T Date: 2025.08.01 17:08:30 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி**

இ.நி.ம.எண்.128/2023
அ.வ.எண்.07/2023
வரைவு /சீரான உத்தரவு
நாள்.01.08.2023
மா.உ.நீ., அவிசாசி